# WH@Home
# உங்கள் இல்லத்திற்குப் பராமரிப்பைக் கொண்டு வருதல்

குணமடைய மருத்துவமனையில் இடம்பெறவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எங்கள் WH@Home பராமரிப்புக் குழுவின் துணையுடன், நாங்கள் உங்கள் உடல்நிலையைத் தொடர்ந்து கண்காணித்து அதேவேளையில், நீங்கள் உங்கள் அன்றாட நடவடிக்கைகளை எளிதில் தொடரலாம். உங்கள் மருத்துவத் தேவைகளைக்* கவனிக்கும் பொருட்டு, தேவைக்கேற்ப, நாங்கள் இல்ல வருகைகள் அல்லது தொலைபேசிவழி கலந்தாலோசனைகள் வழங்குவோம்.

*இவை தேவைக்கேற்ப எங்கள் மருத்தவர்கள், தாதியர்கள் அல்லது சிகிச்சையளிப்பவர்கள் வருகை தருவதை உள்ளடக்கியது.

## ஏன் WH@Homeயைத் தேர்ந்தெடுக்கவேண்டும்?

- உங்கள் வீட்டிலேயே மருத்துவமனைத் தரத்திற்கு நிகரான பராமரிப்பு
- உங்கள் அன்புக்குரியவர்கள் எந்நேரமும் உங்களை வந்து பார்க்கலாம்
- உங்கள் அன்றாட நடவடிக்கைகளுக்குக் குறைந்தபட்ச இடையூறு
- உங்கள் வீட்டுச் சூழலுக்கு ஏற்ப நோயாளி, பராமரிப்பு வழங்குநர் பயிற்சி மாற்றியமைக்கப்படும்
- மெடிசேவ் / மெடிஃபண்டு, பெரும்பாலான தனியார் காப்புறுதியாளர்களிடமிருந்து செலவுத்தொகை கோரலாம்



NHG Health | Woodlands Health

www.wh.com.sg/followus

## நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம்

WH@Home பராமரிப்புக் குழுவால் திட்டம் குறித்த விளக்கம்

இரவல் வழங்கப்பெற்ற சாதனங்கள், மருந்து மாத்திரைகள், மருத்துவ உபகரணங்கள்^ ஆகியவற்றுடன் வீட்டிற்குச் செல்லுவீர் .

தொலைபேசிவழி கலந்தாலோசனைகள் அல்லது இல்ல வருகைகள்வழி முக்கியமான அறிகுறிகள், பரிசோதனைகள் அன்றாடம் சமர்ப்பிக்கப்படும்.

குணமடைந்த பின்னர், மருத்துவக் கண்காணிப்பிலிருந்து வெளியேறுவதற்கான ஆவணங்களைப் பெற்றிடுங்கள்; இரவல் பெற்ற சாதனங்களைத் திரும்பக் கொடுத்திடுங்கள்.

குணமடைந்த பின்னர் தேவைப்படும் மருந்து மாத்திரைகளை உட்லண்ட்ஸ் ஹெல்த் மருந்தகத்தில் பெற்றுக்கொள்ளுங்கள் அல்லது வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான சேவையை தேர்ந்தெடுங்கள்.

^நீங்கள் திட்டத்தில் சேர்ந்த பின்னர், மருத்துவ உபகரணங்கள் உங்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும்

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**என்னுடைய உடல்நிலை மோசமானால் என்ன செய்வது?**

நீங்கள் WH@Home உடனடித் தொலைபேசிச் சேவையை (24/7) அழைக்கலாம். அப்போது, நாங்கள் உங்களுடைய உடல்நிலையைப் பரிசோதித்து, உங்களுக்கு உகந்த பராமரிப்பை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்.

**WH@Home மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவதைக் காட்டிலும் வீட்டில் நோயாளிகளைக் கவனித்துக்கொள்வதில் பராமரிப்பாளர்கள் எவ்வாறு ஈடுபடுத்தப்படுவார்கள்?**

பராமரிப்பு வழங்குநர்கள் முக்கியமான அறிகுறிகளைக் கண்காணித்தல், அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொள்ளுதல் முதலான வழிகளில் நோயாளிகளைப் பராமரிப்பதில் மேலும் துடிப்பாகப் பங்காற்றலாம். எங்கள் பராமரிப்புக் குழு, பராமரிப்பு வழங்குநர்களுடன் இணைந்து நோயாளிகளின் தேவைகளுக்கேற்ப பயிற்சியை வழங்குவர். இதன்மூலம் நோயாளிகள், அவர்கள்தம் பராமரிப்பு வழங்குநர்கள் ஆகிய இரு தரப்பினரும் தங்கள் பராமரிப்பு, சுகாதாரம் ஆகியவற்றைக் கவனித்துக்கொள்வதில் மேலும் ஆற்றல் பெறுகின்றனர்.

**WH@Home -ஒரு உள்ளுநோயாளர் மருத்துவமனை தங்கும் செலவைவிட அதிகமாக செலவாகுமா?**

WH@Home-இற்கான கட்டணங்கள் சாதாரண மருத்துவமனை வார்டுடன் ஒப்பிடும்போது ஒரே மாதிரியானதோ அல்லது குறைவாகத்தான் இருக்கும். இது மெடிசேவ் / மெடிஃபண்டு மற்றும் பெரும்பாலான தனியார் காப்பீட்டாளர்களின் மூலம் கோரலாம்.



மேல்விவரங்களுக்கு இங்கே வருடுங்கள் அல்லது உங்கள் முதன்மை மருத்துவருடன் இன்றே பேசுங்கள்.

https://for.sg/whhome